**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.153/2023
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : சோவித்பிரியா | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of November 2023.

08.11.2023

(எதிரிகள் 1 முதல் 5 ஆஜர், 6ம் எதிரி ஆஜர் இல்லை. 6ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். கடந்த 06.10.2022ம் தேதி இரவு 08.00 மணியளவில் எனது கணவர் அருள்பால்ராஜ் போன் வாங்குவதற்காக சந்தியாகு வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது ஆஜர் 1ம் எதிரி சவரிமுத்து வீட்டின் முன்பு 1ம் எதிரி சவரிமுத்து, 2ம் எதிரி பிரான்சிஸ் இருந்தார்கள். எங்கே இருந்து வந்து எங்கடா வந்து சொத்து கேட்கிறாய் என்று எனது கணவர் அருள்பால்ராஜ்யை பார்த்து கேட்டு நீ உயிருடன் இருந்தால் தானே சொத்து கேட்க வருவாய் என்று கூறி 2ம் எதிரி பிரான்சிஸ் எனது கணவர் அருள்பால்ராஜ்யின் கையை பிடித்துக்கொண்டார்.

2) அப்போது 3ம் எதிரி ஆரோக்கியம் எனது கணவர் அருள்பால்ராஜ்யின் முகத்தில் அடித்துவிட்டார். உன்னை அடித்தால் மட்டும் பத்தாது என்று கூறி 1ம் எதிரி சவரிமுத்து கத்தியை எடுத்துக்கொண்டு வந்து எனது கணவர் அருள்பால்ராஜ்யின் இடதுபக்க இடுப்பில் குத்திவிட்டார். பின்பு மீண்டும் குத்த வந்தபோது எனது கணவர்

அருள்பால்ராஜ் கத்தியை பிடித்ததால் இடது கையில் காயம் ஏற்பட்டது.

3) நான் சத்தம் கேட்குதே என்று வெளியே வந்து பார்த்தபோது 5ம் எதிரி ரோசாமேரி நெற்றியில் எதையோ வைத்து என்னை அடித்து காயம் ஏற்படுத்தினார். 6ம் எதிரி இருதயநேசம் கட்டையால் எனது முதுகில் அடித்தார், 4ம் எதிரி வியாகம்மாள் எனது தாலியைபிடித்து இழுத்து கழுத்தை நெறித்தார். ஆரோக்கியம் மற்றும் பிரகாஷ் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள். சண்டையில் எனது நைட்டி எல்லாம் கிழிந்துவிட்டது டிரஸ்யை மாற்றிவிட்டு சென்றேன். இரவு 09.00 மணியளவில் இளஞ்செம்பூர் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு இருந்த போலிசார் எங்களை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள்.

4) அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். காவல்நிலையம் சென்று புகார் கொடுத்த போது போலிசார் புகார் வாங்க மறுத்துவிட்டார்கள். அதனால் நாங்கள் வழக்கறிஞரை பிடித்து நீதிமன்றம் மூலம் பதிவு செய்யலாம் என்பதை தெரிந்து கொண்டு நீதிமன்றத்தில் மனு செய்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவின் நகலைத்தான் காவல்நிலையத்தில் கொடுத்தேன். **(புகார் மனுவின் நகல் அ.சா.ஆ.1 மற்றும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த குவிமுசபிரிவு 156(3)ன் கீழ் தாக்கல் செய்த மனு அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் B.Com., வரை படித்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு கி.மீ. இருக்கும் என்றால் 3 கி.மீ. இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் எனக்கு எதுவும் மருத்துவ நமுனா கொடுக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் முதுலுதவி சிகிச்சை எடுத்தவுடனே சென்றுவிட்டோம் என்றால் சரிதான்.

2) போலிசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இருட்டான பகுதி என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் சத்தம்கேட்டு தான் சென்றேன் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும் 1ம் எதிரியின் குடும்பத்திற்கும் இடையே பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் இடம் தொடர்பாக

வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) அந்த வழக்கில் எங்களுக்கு எதிராக ஆஜர் 1, 3, 4 மற்றும் 5 எதிரிகள் வழக்கு நடத்துவதால் அவர்களை பழிவாங்கவேண்டும் என்பதற்காக அவர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது கணவர் 2ம் எதிரியை தாக்கியதாக இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்துள்ள புகாரில் எனக்கு எந்த கையில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

4) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் இருட்டான பகுதி என்பதால் யார் காயம் ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் இல்லை மின்விளக்கு கம்ப வெளிச்சத்தில் என்னை அடித்தவர்களை எனக்கு தெரியும். போலிசார் நான் கொடுத்த புகாரின்படி எந்தவிதமான சம்பவமும் நடைபெறாததால் தான் வழக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்து போலிசார் எந்தவிதமான வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்துள்ள புகார் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எதிரிகள் மீது உள்ள முன்பகையை வைத்துக்கொண்டு பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.153/2023
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : அருள்பால்ராஜ் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of November 2023.

08.11.2023

(எதிரிகள் 1 முதல் 5 ஆஜர், 6ம் எதிரி ஆஜர் இல்லை. 6ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். கடந்த 06.10.2022 ம் தேதி இரவு 08.00 மணியளவில் நான் போன் வாங்குவதற்காக சந்தியாகு வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தேன். அப்போது சவரிராஜ் வீட்டின் முன்பு 3ம் எதிரி ஆரோக்கியம், 2ம் எதிரி பிரான்சிஸ் அமர்ந்திருந்தார்கள். அப்போது 3ம் எதிரி ஆரோக்கியம் எங்கிருந்தோ வந்த உனக்கு சொத்து வேணுமாடா என்று கூறிக்கொண்டு என்னை அடிக்க வந்தார்.

2) உடனே 2ம் எதிரி பிரான்சிஸ் இவனை இங்கே குத்தி கொன்று போட்டாலும் கேட்க ஆள் இல்லை என்று கூறி எனது வலது கையை பின்னால் இழுத்து பிடித்துக்கொண்டார். 1ம் எதிரி சவரிமுத்து கத்தியை எடுத்துக்கொண்டு எனது வயிற்றில் குத்த வந்தார். நான் விலகியதால் எனது இடதுபக்க விலாவில் பட்டு காயம் ஏற்பட்டது. மீண்டும் குத்த வரும்போது நான் கத்தியை பிடித்ததால் இடது கையில் காயம் ஏற்பட்டது. அப்போது எனது மனைவி அசா.1 சத்தம்கேட்டு ஓடிவந்தார்.

3) 5ம் எதிரி ரோசாமேரியும், 6ம் எதிரி நேசமும் எனது மனைவி கட்டையால் நடுநெற்றியில் அடித்தார்கள். 4ம் எதிரி வியாகம்மாள் எனது மனைவியின் தாலிகயிற்றை பிடித்து கழுத்தை நெறிக்கினார். பேருந்து நிறுத்ததில் நின்றுகொண்டிருந்த ஆரோக்கியம், பிரகாசம் மற்றும் 5 நபர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். அதன்பின்பு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) போலிசார் என்னை சம்பவம் நடந்த அன்றே இரவு 09.00 மணிக்கு விசாரித்தார்கள். எனக்கு மதுஅருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான், வாரத்திற்கு ஒரு நாள் மதுஅருந்துவேன். நான் 2ம் எதிரியை அடித்ததாக என் மீது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். பரமக்குடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் 1, 3, 4 மற்றும் 5 எதிரிகளுக்கும், எனக்கும் இடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அந்த வழக்கு போட்டதால் தான் என்னை குத்த வந்தார்கள்.

2) எதிரிகள் பரமக்குடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள வழக்கை எதிர்த்து நடத்தி வருவதால் அவர்களை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி எனது சத்தம்கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். ஆரோக்கியம், பிரகாஷ்யும் சத்தம்கேட்டு தான் வந்தார்கள் என்றால் சரிதான். எனது மனைவி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுத்தீர்களா என்றால் சம்பவம் நடந்த மறுநாள் சென்று புகார் கொடுத்தோம்.

3) மருத்துவ நமுனா எதுவும் போலிசார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் எந்தவிதமான காயமும் இல்லாததால் தான் போலிசார் எங்களுக்கு மருத்துவ நமுனா வழங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால சரியல்ல.